செய்தி வெளியீடு எண் :37 நாள் :30.12.2020

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**10,954 பயனாளிகளுக்கு ரூ.4.51 கோடி மதிப்பீட்டிலான**
**தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**
***********

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.12.2020) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற அரசு விழாவில், பயனாளிகளுக்கு தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி, தெரிவித்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு தமிழகத்தில் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, பொருளாதார நிலையை மேம்பாடு அடைய செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலும், சமச்சீரான வளர்ச்சி அடைய வேண்டும் என்ற அடிப்படையிலும், நீண்ட காலத்திற்கு பயன்தரும் வகையில் தொலைநோக்கு பார்வையுடன் பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்தி வருகிறது.

அதில், மனித வாழ்விற்கு அடிப்படை தேவைகளில் ஒன்றான உண்ண உணவிற்கு உத்திரவாதம் அளித்திடும் வகையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசியினையும், உடுத்தும் உடைக்கு உத்தரவாதம் அளித்திடும் வகையில் விலையில்லா வேட்டி, சேலைகளையும், இருப்பிடத்திற்கு உத்தரவாதம் அளித்திடும் வகையில் முதலமைச்சரின் சூரிய ஒளி சக்தியுடன் கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களை பயன்பெறச் செய்து வருகிறது.

மேலும், தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் பயன்பெறும் வகையிலும், ஆணுக்கு நிகராக பெண்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கிலும், அவர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு அதில், பெண் குழந்தைகள் பிறந்து, வளர்ந்து, திருமணம் ஆகும் வரையில், இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், நிதியுதவியுடன் கூடிய தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நிதியுதவித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்கள் பெண்களுக்கென செயல்படுத்தப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மக்களின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TABCEDCO) மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின் (TAMCO) மூலம் பல்வேறு கடனுதவிகளையும், மாணவ, மாணவியர்களை ஊக்கபடுத்தும் விதமாக மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் கல்வி சார்ந்த பரிசுத்தொகை, கல்வி உதவித்தொகை, பள்ளி மேற்படிப்பிற்கான உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் சிறுபான்மையினர் சமுதாயத்தை சார்ந்த பின் தங்கிய நிலையிலுள்ள முஸ்லீம் மகளிர்களுக்கு உதவும் வகையில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலம் திரட்டப்படும் நன்கொடைத் தொகைக்கு இணை மானியமாக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதனைத்தொடர்ந்து, கிறிஸ்துவ மகளிர்களுக்கு உதவும் வகையில் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் திரட்டப்படும் நன்கொடைத் தொகைக்கு இணை மானியமாக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் அரசால் வழங்கிட உத்தரவிடப்பட்டு, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்க உறுப்பினர்களுக்கு தலா ரூ.9,000/- வீதம் 70 பயனாளிகளுக்கு ரூ.6.30 இலட்சம் மதிப்பிலான நிதியுதவியும், தலா ரூ.10,000/- வீதம் 237 பயனாளிகளுக்கு ரூ.23.70 இலட்சம் மதிப்பிலான நிதியுதவியும், விலையில்லா தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 126 பயனாளிகளுக்கு ரூ.6.13 இலட்சம் மதிப்பிலான தேய்ப்பு பெட்டிகள் மற்றும் விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 76 பயனாளிகளுக்கு ரூ.2.57 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்களும் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய விஞ்ஞான உலகத்திற்கு ஏற்ற உலக தரம் வாய்ந்த கல்வியினை ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் பொருட்டு, மாணவ, மாணவியர்களின் ஏழ்மையின் காரணமாக அவர்களின் கல்வி எந்த ஒரு சூழ்நிலையிலும் தடைபடக் கூடாது என்பதனை கருத்தில் கொண்டும், கல்வி ஊக்கத்தொகை, விலையில்லா பாட புத்தகம், நோட்டுப்புத்தகம், வருடத்திற்கு நான்கு ஜோடி சீருடைகள், காலணிகள், புத்தகப்பை, வடிவியல் பெட்டிகள், வரைபட புத்தகங்கள், கிரையான்ஸ், கணித உபகரணங்கள், பேருந்து பயணஅட்டை, விலையில்லா மிதிவண்டிகள், மடிக்கணிகள் எண்ணற்ற கல்வி சார்ந்த பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி, பெற்றோர்களின் பொருளாதார சுமையினை மாண்புமிகு அம்மாவின் அரசு ஏற்று வருகிறது.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களில் ஒன்றான விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், இன்றைய தினம் பதினொன்றாம் வகுப்பு பயிலும் 4,853 மாணவர்களுக்கு ரூ.196.20 இலட்சம் மதிப்பீட்டிலும், 5,592 மாணவியர்களுக்கு ரூ.215.90 இலட்சம் மதிப்பிலான மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் ஒவ்வொரு குடும்பத்தைச் சார்ந்தவர்களும் பயன்பெற்று வருகின்றனர். இன்றைய தினம் இவ்விழாவின் மூலம் மொத்தம் 10,954 பயனாளிகளுக்கு ரூ.4.51 கோடி மதிப்பீட்டிலான தமிழக அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் தாங்கள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், தங்களைச் சார்ந்தவர்களுக்கும் எடுத்துரைத்து பயன்பெறச் செய்வது மட்டுமல்லாமல் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிற்கு பொதுமக்கள் ஆதாரவினை அளித்திட வேண்டும் என தெரிவித்தார்.

இவ்விழாவில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட ஊராட்சித்தலைவர் க.ப்ரிதா, முதன்மைக் கல்வி அலுவலர் ம.க.செ.சுபாஷினி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் இரா.நிறைமதி, மாவட்ட கல்வி அலுவலர்கள் பாலாஜி, ராகவன், திருப்பதி, மாவட்ட கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்க கௌரவ செயலாளர் கண்ணன் என்ற ஜெயச்சந்திரன், மேகமலை-மணலாறு பங்குதந்தை பிலீப்ஆரோக்கியம் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**